# ஆகஸ்ட் 3 முதல் இரு வழிப்பாதையாகும் அண்ணா சாலை

சென்னை, ஜூலை 30: சென்னை அண்ணா சாலை ஆகஸ்ட் 3-ஆம் தேதி முதல் இரு வழிப்பாதையாக மாற்றப்படுகிறது.

மெட்ரோ ரயில் பணிக்காக கடந்த 2011-ஆம் ஆண்டு அண்ணா சாலையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. சில இடங்களில் முற்றிலும் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. சில இடங்கள் ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டன. இதற்காக அண்ணா சாலையில் எல்.ஐ.சி.யில் இருந்து ஸ்பென்சர் வழியாக வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

இந்த வழியாக செல்ல வேண்டிய வாகனங்கள் ஜெனரஸ் பேட்டர்ஸ் சாலை, ஒயிட்ஸ் சாலை, எக்ஸ்பிரஸ் அவென்யூ ஆகிய சாலைகள் வழியாக அண்ணா சாலையை சென்றடைந்தன. அண்ணா மேம்பாலத்தில் இருந்து சிம்சன் வரை ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டது. இதேபோல நந்தனம்,தேனாம்பேட்டை பகுதியிலும் அண்ணா சாலை ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டது. இதற்காக அந்தப் பகுதியை சுற்றியுள்ள சாலைகளிலும் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டன. அண்ணா சாலையில் பல இடங்கள் ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டதாலும் போக்குவரத்து மாற்றத்தினாலும் வாகன ஓட்டிகள் மிகவும் அவதிப்பட்டு வந்தனர். இதனால் பல இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இந்த நிலையில் 10 ஆண்டுகளுக்கு பின்னர் மெட்ரோ ரயில் பணி முழுமையடைந்து, அதன் சேவை அண்மையில் தொடங்கியது.

மெட்ரோ ரயில் பணிக்காக அண்ணா சாலையில் சுரங்கம் அமைக்க தோண்டப்பட்ட பல்வேறு இடங்களை சீரமைக்கும் பணி கடந்த 2 மாதங்களாக நடைபெற்று வந்தன. இப் பணி பெரும்பாலான இடங்களில்நிறைவுபெற்றுவிட்டதால், சாலை அமைக்கும் பணி நடைபெறுகிறது. இதில் நந்தனம் பகுதியில் முழுமையாக அனைத்துப் பணிகளும் நிறைவு பெற்றதால், கடந்த 26-ஆம் தேதி முதல் சோதனை முறையில் இரு வழிப்பாதையாக அண்ணா சாலை மாற்றப்பட்டது. இதற்கு வாகன ஓட்டிகளிடம் நல்ல வரவேற்பு கிடைத்தது. இதனால், நந்தனம் பகுதியில் அண்ணா சாலை இரு வழிப்பாதை போக்குவரத்து செவ்வாய்க்கிழமை முறைப்படி தொடங்கியது.

**இரு வழிப்பாதை:** இதேபோல தேனாம்பேட்டை, எல்.ஐ.சி. ,சிம்சன் பகுதிகளிலும் சாலை சீரமைக்கும் பணி ஓரிரு நாள்களிலும் நிறைவு பெற்றுவிடும் என கூறப்படுகிறது. இதையடுத்து ஆகஸ்ட் 3-ஆம் தேதி முதல் அண்ணா சாலை முழுவதிலும் இரு வழிப் போக்குவரத்தை அனுமதிக்க சென்னை பெருநகர காவல்துறை முடிவு செய்துள்ளது. இதற்கான பணிகளை போக்குவரத்துப் பிரிவு போலீஸார் செய்து வருகின்றனர். அண்ணா சாலை இரு வழிப்பாதை மாற்றப்பட்ட பின்னர், அப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் பெருமளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



மெட்ரோ ரயில் பணிகளுக்காக ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்ட சென்னை அண்ணா சாலை (கோப்புப்படம்)